**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108553

1. District மாவட்டம் : திருவண்ணாமலை PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 05 Date: நாள் 18-08-2021

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988, as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17-08-2021 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.30 Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18-08-2021 Time : நேரம் 07.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் ஆரணி, வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் 65 கி.மீ வடக்கே
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. ஆனந்தராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மணி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி எ3. 1628/5, கீழாண்ட தெரு, சான்றோர்பாளையம் கிராமம், சேவூர் பஞ்சாயத்து ஆரணி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஜெகதீசன், செயலாளர், ஆரணி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. ஆனந்தராஜ் 18.8.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[illegible] 18/8/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18-08-2021 at 11.00 hrs

Name: பெயர் P. அன்பழகன்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
[illegible]
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து அனுப்பப்படுகிறது :** திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 18.08.2021-ஆம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் திரு. ஆ.ஆனந்தராஜ், வயது.30/2021, த/பெ மண்ணு, நெ.1628/5, கீழாண்டத்தெரு, சான்றோர்பாளையம் கிராமம், சேவூர் பஞ்சாயத்து, ஆரணி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி எழுத்துமூலமாக புகார் மனு ஒன்றை அளித்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு உள்ளது. அனுப்புநர் M.ஆனந்தராஜ், வயது.30, த/பெ மண்ணு, நெ.1628/5, கீழாண்டத்தெரு, சான்றோர்பாளையம் கிராமம், சேவூர் பஞ்சாயத்து, ஆரணி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம். ஐயா, நான் ஆரணி தாலுக்கா சான்றோர்பாளையம் கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது பெயரில் குன்னத்தூர் கிராமத்தில் உள்ள சர்வே எண்.299/15A, 297/1B, 297/2B, 298/1B, 299/11-இல் மொத்தம் சுமார் 1 ¾ ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் சுமார் நான்கு மாதத்திற்கு முன்பு நெல் பயிரிட்டேன். கடந்த 20 நாட்களுக்கு முன்பு நெல் அறுவடை செய்து இரண்டு நாட்கள் காய வைத்து சுமார் 70 கிலோ அளவுள்ள 40 மூட்டைகளில் நிரப்பி வீட்டிற்கு எடுத்துச்சென்றேன். நான் கடந்த 14.08.2021-ஆம் தேதி அன்று ஆரணியில் உள்ள பெஸ்ட் பிரௌஸிங் சென்டரில் ஆரணி உள்ள டிபிசி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எனது நெல் மூட்டைகளை விற்க ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அதற்கான டோக்கன் நம்பர். DPC_028/12939 அந்த விண்ணப்பத்தில் எனக்கு 16.08.2021-ஆம் தேதி மதியம் 2 மணி முதல் 4 மணி வரை நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நான் 16.08.2021-ஆம் தேதி எனது நெல் மூட்டைகளை வாடகை டாடா ஏசி வண்டி மூலம் ஆரணி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு கொண்டு சென்றேன். அப்போது அங்கிருந்த ஆரணி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் திரு.ஜெகதீசன் என்பவரிடம் என்னுடைய நிலத்தின் சிட்டா அடங்கல், ஆதார் கார்டு நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் ஆன்லைனில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பம் ஆகியவற்றை அவரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த ஆவணங்களை சரிபார்த்துவிட்டு, சரியாக உள்ளது என்றும், உங்களது நெல் மூட்டைகளை இறக்கி வைத்துவிட்டு மறுநாள் 17.08.2021-ஆம் தேதி காலை வருமாறு கூறினார். நான் நெல் மூட்களை அங்கேயே இறக்கி வைத்துவிட்டு இரவு வீட்டுக்கு வந்துவிட்டேன். மறுநாள் 17.08.2021-ஆம் தேதி காலை 10.30 மணி அளவில் எனது நெல் மூட்டைகளை பிரித்து தூற்றி எடை போட்டு 40 கிலோ எடையுள்ள 62 நெல் மூட்டைகளாக சாக்குப்பைகளில் பிரித்து வைக்கப்பட்டது. அன்று மதியம் சுமார் 1.30 மணியளவில் ஆரணி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்க அலுவலகத்தில் இருந்த செயலாளர் திரு.ஜெகதீசன் அவர்களை சந்தித்து என்னுடைய நெல்லை தூற்றி எடைபோட்டு 62 சிப்பமாக பிடித்து

வைக்கப்பட்டுள்ளது அதற்கான பில் தருமாறு கேட்ட போது அவர் ஒரு மூட்டைக்கு 45 ரூபாய் வீதம் 62 மூட்டைக்கு 2790 ரூபாய் கொடுத்துவிட்டு பில்லை வாங்கிக்கொள் என்று சொன்னார். இந்தப்பணம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகையா, இதற்கு பில் தருவீர்களா என்று கேட்டதற்கு, திரு.ஜெகதீசன் அவர்கள் இதற்கு பில் எல்லாம் தர முடியாது என்றும், இந்தப்பணம் அலுவலக செலவிற்கு என்றும் கூறினார். நான் அதற்கு அவ்வளவு தொகை என்னால் கொடுக்க முடியாது என்று கூறியதற்கு, அவர் பணத்தை கொடுத்தால்தான் உனக்கு பில் கிடைக்கும் என்று கோபமாக கூறினார். அதற்கு நான் லஞ்சம் பொடுத்து பில் வாங்க விருப்பம் இல்லாததால் செயலாளர் திரு. ஜெகதீசன் மீது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று மனதில் நினைத்துக்கொண்டு, சரி சார் ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனவே இன்று 18.08.2021-ஆம் தேதி திருவண்ணாமலை லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுலகத்திற்கு வந்து, என்னுடைய நெல் மூட்டைகளை கொள்முதல் செய்து பில் கொடுப்பதற்கு லஞ்சமாக ரூ. 2790/- கேட்ட ஆரணி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் செயலாளர் திரு.ஜெகதீசன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுக்கின்றேன். ஐயா அவர்கல் தக்க நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, Sd(xxxxx) M. ஆனந்தராஜ். **18.8.2021**. Sir, Received the complaint on 18.08.2021 at 0700 hrs and conducted a confidential enquiry on the general reputation of the accused officer and the complainant. Since the information contained in this complaint discloses a cognizable offence, obtained permission from the Superintendent of Police, Western Range, DVAC. Today on 18.08.2021 at 0900 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.05/2021, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 18/8/2021. P.ANBALAGAN, Inspector of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble CJM and Special Judge, TVM and sent the copies to the officers concerned.

[signature] 18/8/2021
P. ANBALAGAN
Inspector of police
V&AC, Tiruvannamalai.